# பனிமயம்

மார்ச் 2024





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

அருளின் காலமாம் தவக்காலத்தில் இருக்கிறோம். செபம், தவம், அன்புச் செயல்களால் நற்செய்தி காட்டும் வாழ்வு வாழ முயற்சிகள் எடுக்கிறோம். அவற்றுக்கு உதவியாகப் பேராலயத்தில் பல சிறப்பு நிகழ்வுகள் இத்தவக்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று எதிர்வரும் **03.03.2024 ஞாயிறு** காலை **09.30** முதல் மாலை **04.00** வரை மங்கலகிரி, டிவைன் மெர்சி தியான இல்லத்தில் நடைபெறவுள்ள தவக்காலத் தியானம். அருள்பணி. ஜெமல்ஸ் (பாளை மறைமாவட்டம்) வழிநடத்தவிருக்கிற இத்தியானத்தில் குடும்பமாகக் கலந்துகொள்ளுங்கள்.

எதிர்வரும் **8,9,10** (வெள்ளி, சனி, ஞாயிறு) மூன்று நாள்களும் திருஇதயங்களின் பேராலய வளாகத்தில் **தவக்கால நற்செய்திக் கூட்டம்** நடைபெறுகிறது. அதில் கலந்துகொண்டு மனமாற்றத்திற்கான நற்செய்திக்கு உளமார செவிமடுப்போமாக.

எதிர்வரும் **17.03.2024** ஞாயிறு நண்பகல் **12.00** முதல் **03.00** வரை **"குடும்ப ஆசீர்வாதங்களுக்கான"** பனிமய நோன்பு வழிபாடு நமது பேராலயத்தில் நடைபெறவுள்ளது. குடும்பமாக அதில் கலந்துகொள்ளுங்கள்.

எதிர்வரும் **24.03.2024** குருத்து ஞாயிறு நண்பகல் **11.00** முதல் **03.00** வரை நமது திருச்சிலுவை சிற்றாலயத்தில் "சிலுவையிலிருந்து ஏழு வார்த்தைகள்" என்னும் தலைப்பில் **நோன்புத் தியானம்** நடைபெறவுள்ளது. குடும்பமாக அதில் கலந்துகொள்ளுங்கள்.

மேலும், தனியாக, குடும்பமாக, அன்பியமாக, பக்த சபையாக அறச் செயல்களும், அன்புப் பணிகளும் செய்யவும் இத்தவக்காலத்தில் அழைப்பு விடுக்கிறேன். வழிபாட்டில் பங்கேற்கும் ஆர்வத்தோடு, பிறரன்புப் பணிகளிலும் ஈடுபடுவோம். "அன்பு செலுத்தவும் நற்செயல்கள் புரியவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக" (எபி **10:24**) என்னும் இறைவார்த்தைக்கேற்ப இத்தவக்காலம் அமைவதாக.

தவக்காலத்தின் அனைத்து செயல்பாடுகளும் நம்மை உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்னும் எதிர்நோக்குடன் நம் தவப்பயணத்தைத் தொடர்வோம்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 25 தாரகை 7

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
புனித பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
புனித பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

**இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து**

**புதிய மறைச்சாட்சிகளுக்காக...**

உலகின் பல்வேறு பகுதிகளில் நற்செய்திக்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைப்பவர்கள், தங்களின் துணிவாலும் திருத்தூதுப்பணி ஆர்வத்தாலும் திரு அவையைப் பற்றியெரியச் செய்ய நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

## வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் 4

1. முதல் குருவாம் அன்னை மரியா . . . . . . . . . . 4
அருள்பணி. ராஜா ரொட்ரிகோ
2. இறைவனின் தாய் நம் எல்லோருக்கும் தாய் . . . 6
ஜே.பி. பெர்னாண்டோ
3. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 7
4. அன்னையைத் தேடி . . . . . . . . . . . . . . . . . . 8
திருமதி. பிரிஜில்லா லோபோ
5. அனைத்தும் நீயே அம்மா . . . . . . . . . . . . . . . 9
வெ. ஜெயந்தி
6. மரியன்னையின் முன்னோடிகள் - சாரா! . . . . 10
அருள்பணி. குமார்ராஜா
7. பனிமயம் - மீள் பார்வை . . . . . . . . . . . . . . 12
கலாபன் வாஸ்
8. பனிமயம் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம் . . . . . . . . . . . . . . . . . . . . . 14
9. பனிமய பங்குத் தந்தையர் . . . . . . . . . . . . . . 15
10. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . 16
11. மாதம் ஒரு மாதா படம் . . . . . . . . . . . . . . . 19
12. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . 20
13. தவக்காலம் 2024 திருநிகழ்வுகள் . . . . . . . . . . 23
14. புனித வாரத் திருநிகழ்வுகள் - 2024 . . . . . . . . 24

# முதல் குருவாம் அன்னை மரியா



நமது விதவைத் தாய் அன்னை மரியாவை பற்றி கூறுகையில், கல்வாரி மலையிலே அன்னை மரியா நிற்கின்ற பொழுது, அந்த கல்வாரி மலையிலே சிலுவையில் தொங்குகின்ற இயேசுவைப் பார்த்து, நம்மிடம் அவர் சொல்லுவது இதுதான். ஒவ்வொரு அருட்பணியாளரும் சொல்லுகின்ற மேன்மை மிக்க வார்த்தைகள் அவை - “இது என் உடல்; இது என் இரத்தம்.”

அருள்பணியாளர் பலிபீடத்தில் இந்த வார்த்தைகளைக் கூறுகின்றபொழுது, அங்கே திருப்பலி நிறைவேற்றப்படுகின்றது. ஒவ்வொரு திருப்பலியிலும் இந்த மகத்தான வார்த்தைகள் ஒவ்வொரு முறையும் சொல்லப்படுகின்றன. அந்த வார்த்தைகளை கல்வாரி மலையில் இருக்கின்ற அதே அன்னை மரியாவும், மிகவும் ஆணித்தரமாக அழுத்தம் திருத்தமாக சொல்லலாம் - “இது என் உடல் இது என் இரத்தம்” என்று.

உண்மைதானே? ஆம், உண்மைதான். தன்னுடைய கருவறையில் சுமந்த இயேசு கிறிஸ்துவைத் தன்னுடைய உடலில் இருக்கின்ற இரத்தத்தின் வழியாக உணவின் வழியாக அன்னை மரியா இயேசுவை உருவாக்குகின்றார். எனவே இந்த வார்த்தைகளைக் கூறுவது என்பது அன்னை மரியாவுக்கு இது சாலப் பொருத்தமாகும்.

எனவேதான் அன்னை மரியாவை இந்த உலகத்தின் முதல் குரு என்று நம்மால் சொல்ல முடியும். அந்த அளவிற்கு மிக உன்னதமான, மேன்மையான, அதி மகத்துவமான தகுதியைக் கொண்டிருக்கின்றவர் அன்னை மரியா.

இத்தாலியில் என்னுடைய பங்கிற்கு அருகில் இருக்கின்ற லான்சியானோ என்ற இடத்தில் நற்கருணைப் புதுமை எட்டாம் நூற்றாண்டில் நடைபெற்றது.

திருப்பலியை நிறைவேற்றுகின்ற அருட்பணியாளருக்கு ஒரு சிறிய சந்தேகம் வருகின்றது. உண்மையில் இயேசு கிறிஸ்து இந்தத் திருப்பலியில் வருகின்றாரா? இந்த அப்பமும் இரசமும், உடலும் இரத்தமுமாக மாறுகின்றனவா? என்ற ஒரு சந்தேகம்.

இவ்வாறாக, அவர் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது, திடீரென அந்த அப்பத்தை இரசத்தை அர்ச்சிப்பதற்கான வார்த்தைகளைச்

சொல்லுகின்றபொழுது "இது என் உடல் .... இது என் இரத்தம்" என்று சொல்லுகின்ற அந்த நேரத்திலே நற்கருணைப் புதுமை நடைபெறுகின்றது. அப்பமானது இயேசுவின் உடலாக அங்கு துடிதுடிக்க ஆரம்பிக்கின்றது. இரசமும் இயேசுவின் இரத்தமாகச் செந்நிறமாக மாறுகின்றது.

இன்றளவும் அதனை மிகவும் அழகாக நேர்த்தியாக பேணிக்காத்து வருகின்றார்கள் பிரான்சிஸ்கன் சபை அருட்பணியாளர்கள். இன்றளவும் ஆலயத்தின் நடுநாயகமாக வீற்றிருக்கின்ற அந்த இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் நம்முடைய ஊனக் கண்களால் காண முடிகின்றது. அந்த உண்மையான இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் நம்பிக்கையோடு தொடுகின்ற எல்லோருக்கும் பல்வேறு புதுமைகள் இன்றளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1971 மார்ச் மாதம் 4 ஆம் நாளில் இந்த இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் அறிவியல்பூர்வமாக இது உண்மையில் சதையும் இரத்தமுமாக இருக்கின்றது என்பதை எண்பிப்பதற்காக ஒரு ஆய்வு நடத்தப்படுகின்றது. டாக்டர் லினோலி (Dr. Linoli) குழுவினர் அந்த ஆய்வை நடத்துகின்றனர். அதன் முடிவு அந்த சதையும் இரத்தமும் உண்மையான மனித உடலில் உள்ளவையே. அதன் இரத்த வகை AB ஆகும்.

இத்தாலியில் உள்ள தூரின் நகரில் உள்ள புனிதக் கவசம் அதாவது இயேசுவின் உடலை போர்த்தியிருந்த துணிகளில் மற்றும் வெரோனிக்காவின் அந்தப் புனித துணியிலும் உள்ளது போன்றே AB இரத்த வகையைச் சார்ந்ததாகும்.

இத்தாலி எங்கே இருக்கின்றது? எருசலேம் எங்கே இருக்கின்றது? இரண்டு இடங்களிலும் காணப்பட்ட எட்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு நடந்த அந்த புதுமையிலும் அதே இரத்த வகை இருப்பது என்பது ஆச்சரியம் ஆனால் உண்மை!

அதே இயேசு கிறிஸ்துவைத்தான் நம்முடைய ஆலயத்திலும் நடுநாயகமாக நற்கருணைப் பேழையில் அவருடைய உடலை வைத்து இன்றளவும் ஆராதித்துக் கொண்டிருக்கின்றோம். அந்த நற்கருணைப் பேழையில் இருப்பது இறை இயேசுவின் உண்மையான உடல். அதனை நாம் நம்பிக்கையோடு பெறுகின்றபொழுது உண்மையில் நமக்கும் நம்முடைய குடும்பத்திலே பல்வேறு புதுமைகள் கண்டிப்பாக நடைபெறுகின்றன.

இயேசுவின் உடலைத் தாங்கி இருக்கின்றதுதான், அந்த நற்கருணைப் பேழை. அன்னை மரியாவுக்கும் அந்த ஒரு பேறும் இருக்கின்றது, பெயரும் இருக்கின்றது. எனவேதான் அந்த உண்மையான இயேசுவின் உடலை தன்னுடைய கருவறையில் சுமந்த அந்த அன்னை மரியாவைப் பார்த்து நாம் சொல்லுகின்றோம் – "அன்னை மரியா ஒரு நற்கருணைப் பேழை" என்று. இந்த நற்கருணைப் பேழையாம் அன்னை மரியாவைத்தான் நாம் போற்றி அன்னைக்கு வணக்கம் செலுத்துகின்றோம்.

இயேசு கிறிஸ்து என்ற தன் மகனின் மூலமாக அன்னை மரியா மிகுந்த உயர்வடைகின்றார். நாமும் அதைப் போன்று இயேசு கிறிஸ்துவை மையமாக நமதாக்கி அவரை நம்முடையதாக ஆக்குகின்ற பொழுது நாமும் மிகவும் சிறந்து விளங்குவோம்.



அருள்பணி. ராஜா ரொட்ரீகோ

# இறைவனின் தாய் நம் எல்லோருக்கும் தாய்



“மரியா” என்ற திருப்பெயரில் பற்றும் பாசமும் கொண்ட மக்கள் உலகெங்கும் உள்ளனர் என்பது உண்மையே! மரியாவின் பெயரை, தங்கள் பெயருக்கு முன்னாலோ அல்லது தங்கள் பெயரோடு இணைத்தோ வாழ்ந்த புனிதர்கள் உண்டு! முன் மாதிரியாக, புனித அல்போன்சு தே மரிய லிகோரி (St. Alphonsus De Maria Liguori), புனித யோவான் மரிய வியான்னி (St. John Maria Vianney), புனித மேக்சி மில்லியன் மரிய கோல்பே (St. Maximilian Maria Kolbe).

அன்று வாழ்ந்த மக்களிடமும், இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடமும், இந்த பழக்கம் இன்றும் இருந்துகொண்டே தான் இருக்கின்றது.

எல்லோரையும் பாதுகாக்கும் இறைவன் (திபா 121:7,8), இயேசுவாகப் பிறந்தபோது, ஏரோது அரசனிடமிருந்து, இயேசுவைப் பாதுகாக்க, இயேசுவின் தாய் மரியா, குழந்தை இயேசுவை, எகிப்துக்கு எடுத்துச் சென்றார். அங்கே, இயேசு, தன் தாய் மரியாவின் அரவணைப்பில் பாதுகாப்பாக இருந்தார் (மத் 2:1,13-15).

ஏழு பேய்களால் பீடிக்கப்பட்டு, இயேசுவால் குணமாக்கப்பட்ட மகதலா மரியாவுக்கு (மாற் 16:9), கல்லறையில் வைத்திருந்த இயேசுவின் உடலைத் தேடின மகதலா மரியாவுக்கு, இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, முதலில் தோன்றினார் (மாற் 16:9, யோவா 20:1-17) என்று நற்செய்தியாளர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

மலைகளும், நிலமும் உலகம் தோன்றும் முன்பே ஊழிஊழிகாலமாய் உள்ள இறைவனை (திபா 90:2), நம் பெருமைமிக்க

கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவை (தீத்து 2:13), தூய ஆவியால் கருவுறப்பெற்ற (மத் 1:20, லூக் 2:7), இயேசுவின் தாய் அருள் நிறைந்த மரியாவுக்கு (யோவா 2:1, லூக் 1:28) முதலில் தோன்றாமல் இருந்திருப்பாரோ?

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, இயேசு தன் தாய் மரியாவுக்கு முதலில் தோன்றினார் என்று நற்செய்தியாளர்களில் யாராவது ஒருவர்கூட, நற்செய்தியில் பதிவுசெய்யாமல் போனதும் ஏனோ? மறந்ததும் ஏனோ என்று வருந்த வேண்டாம்!

இறைவனுக்கே சொந்தமான, அரும்பெரும் செல்வமாகிய, தன் தாய் மரியாவை, மனித குலம் தனக்கே சொந்தமாக்கிக் கொள்ள, மேதகு சிறப்பு வாய்ந்த கொடையாக - நமக்குத் தாயாக வழங்கினார் இறைவன்!

திருத்தூதர்கள், உலகெங்கும் சென்று, நற்செய்தியை, அறிவிக்கும் முன்பே, அவர் (இயேசு) உங்களுக்குச் சொல்வதை எல்லாம் செய்யுங்கள் (யோவா 2:5) என்று, கானா ஊர் திருமணத்தின்போது உலகிற்கு நச்செய்தியை அறிவித்த முதல் திருத்தூதர் மரியா! எனவே நம் அன்னை மரியா, நற்செய்தி அறிவிப்புப் பணியின் அன்னை!

'ஆண்டவர்' என்று அழைக்கப்படும் 'அதோனாய்' (Adonai) என்ற எபிரேயச் சொல்லுக்கு, யாவே (Yahweh) அதாவது 'கடவுள்' என்று பொருள்.

காண்க : விப 6:3, திபா 68:4, 83:18

அப்படியென்றால், இயேசுவின் தாயை, என் ஆண்டவரின் தாய் - என் இறைவனின் தாய் (லூக் 1:43) என்று எலிசபெத்து அழைத்ததுபோல், நாமும் அழைப்போம்!

திருத்தூதர் தோமா, இயேசுவை "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" (யோவா 20:28) என்று அழைத்தார்.

ஆகையால் நாமும், நம் இயேசுவின் தாயை, "நீரே என் ஆண்டவரின் தாய்! நீரே என் கடவுளின் தாய்!" என்று நம் அகம் குளிர, நம் முகம் மலர அழைத்து மகிழ்வோம்!



**ஜே.பி. பெர்னாண்டோ**



# பனிமய சாட்சியம்

*பனிமய சாட்சியம் : 86*

## ஐயப்பன் – மோனிஷா பிரீத்தி குடும்பத்தினர், நாகர்கோவில்

நானும் என் மனைவியும் நாகர்கோவிலில் வசித்து வருகிறோம். எனக்கு சரியான வேலை இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமப்பட்டோம். அப்போது பனிமயத் தாயைக் குடும்பத்தோடு வந்து தரிசித்து அன்னையிடம் மன்றாடினோம். எனக்கு நல்ல வேலை கிடைக்கவும், சொந்தமாக வீடு அமையவும் பனிமயத்தாயிடம் கண்ணீர் சிந்தி வேண்டினோம். ஊருக்கு திரும்பிய ஒரே மாதத்தில் எனக்கு நல்ல வேலை கிடைத்தது. அதன் காரணமாக நாங்கள் விரும்பியபடியே சொந்தமாக வீடும் அமைந்தது. ஒருவருடம் கழித்து மீண்டும் அன்னையைத் தரிசித்து ஒரு புடவையை எங்கள் காணிக்கையாக செலுத்தினோம். அதனால் மாதாவுக்கு நன்றி சொல்கிறேன். பனிமய அன்னையே நீர் வாழ்க!

# அன்னையைத் தேடி



ஒருமுறை நான் தூத்துக்குடிக்கு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்குத் தெரிந்த நபர் ஒருவர் என் அருகில் வந்து உட்கார்ந்தார். அவர் ஓர் ஆசிரியர். கணவனை இழந்தவர்.

“நான் எந்த வேலையாக தூத்துக்குடிக்குச் சென்றாலும் திரும்புவதற்கு முன்னால், பனிமய அன்னையை தரிசித்து விட்டுத்தான் ஊருக்குத் திரும்புவேன்” என்று ஆசிரியர் கூறினார். “அவ்வளவு பக்தியா?” என்று நான் கேட்டேன். “அதற்கும் மேலே” என்று அவர் கூறினார்.

“அவள் என் தாய். அந்த அற்புதத் தாய் என் மகளுக்கு செய்த உதவியை நான் எப்படி மறக்க முடியும்?” என்று கூறிவிட்டு உரையாடலை ஆரம்பித்தார்கள்.

“2008ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி, என் மகளுக்கு 7ஆம் மாதத்திலே குறைப்பிரசவம் ஏற்பட்டது. பிறந்த குழந்தை மூன்று நாட்கள் உயிரோடு இருந்தது. 18ஆம் தேதி இறந்துவிட்டது. என் மகளின் உடல் நிலையும் மிகவும் மோசமாக இருந்தது. எனக்கு அவள் ஒரே மகள். தகப்பன் முகம் பார்க்காத என் அருமைச் செல்வம். அவள் கஷ்டத்தை என்னால் பொறுக்க முடியவில்லை.


ஒரு வாரம் கழித்து வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். மருத்துவமனையை விட்டுப் புறப்படும்போது, மருத்துவர் கூறிய செய்தி, மேலும் எங்களைத் தூக்கிவாரிப் போட்டது. 5 வருடங்களுக்கு உங்கள் மகள் குழந்தை தரிக்கக் கூடாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். என் மகளின் முகத்தைப் பார்க்க என்னால் முடியவில்லை. குழந்தை இறந்த துக்கத்திற்கு மேலாய், இந்தக் கட்டுப்பாடு எங்களுக்குப் பேரிடியாய் இருந்தது.

வீட்டிலே எப்பொழுதும் நிசப்தம். என் மகள் ஓர் அறைக்குள்ளே முடங்கிவிட்டாள். நான் கண்ணீரோடு என் பணியைச் செய்ய ஆரம்பித்தேன். ஒருநாள் அருள்தந்தை ரோஷன், இந்தச் செய்தியைக் கேட்டு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். தஸ்நேவிஸ் மாதா கையிலுள்ள பாலன் போட்டிருந்த ஒரு சட்டையைக் கொண்டு வந்து என் மகளின் கையில் கொடுத்தார்.

“அம்மா! உன் கையில் வைத்திருக்கும் மகனைப்போல் எனக்கும் ஒரு குழந்தை கொடு அம்மா!’ என்று தினசரி மாதா சுரூபத்திற்கு முன்னால் அமர்ந்து ஜெபம் செய்யுங்கள்” என்று கூறி என் மகளின் கையில் கொடுத்துச் சென்றார்.

2 ஆண்டுகளுக்குப் பிறகு, மருத்துவக் கட்டுப்பாட்டையும் மீறி, ஓர் ஆண் குழந்தை நலமுடன் பிறந்தது. எங்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை” என்றார்.

அன்னை மரி செய்யும் அற்புதங்கள், அதிசயங்கள் உலக மக்கள் அறிந்ததே. நம் மன்றாட்டுக்களை இறைவன் பாதத்தில் சேர்த்து, உதவிகளைப் பெற்றுத் தருபவள் நம் அன்னைதான். மாசற்ற அன்னையின் திருவுளத்திற்குச் செய்யப்படுகின்ற நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரம் செய்வோம். தொடர்ந்து செபமாலை சொல்வோம்.



திருமதி. பிரிஜில்லா லோபோ

தங்கத் தேர் 11 கவிதைகள்

# அனைத்தும் நீயே அம்மா



என் அம்மா தேனம்மா
என் பிள்ளைகட்கு நானுமம்மா
வானதூதரின் அருள்நிறைந்த அம்மா
ஆகட்டுமென சம்மதித்த அம்மா

எலிசபெத் சொன்ன ஆண்டவரம்மா
இயேசுவை பெற்ற தஸ்நேவிஸம்மா
கானாவில் தேவையை புரிந்த அம்மா
இயேசுவின் அற்புதம் நடத்திய அம்மா

பன்னிரு வயதில் தவித்த அம்மா
பத்தாவின் பண்புள்ள மனைவியம்மா
பாடுகளில் மகனுடன் நடந்தாயம்மா
கல்வாரி சிலுவையடியில் நின்றாயம்மா

யோவானுக்கு மட்டுமா நீர் அம்மா
கடவுளின் பிள்ளைகளுக்கும் நீரே அம்மா
சீடர்களின் மனத்துணிவு நீரே அம்மா
தூயஆவியாரின் அருள்பொழிவை பெற்ற அம்மா

விண்ணரசியாக முடிசூட்டப்பட்ட அம்மா
மண்ணக பக்தர்களின் பரிந்துரையம்மா
தங்கத்தேரில் வலம் வந்த அம்மா
தங்க மகனின் ஆசீரளித்த அம்மா

வெ. ஜெயந்தி



*மரியன்னையின் முன்னோடிகள்: 8*

# தோபியாவின் மனைவி சாரா!



ஆபிரகாமின் மனைவி சாராவை அனைவருக்கும் தெரியும். ஆனால், தோபியாவின் மனைவி சாராவைப் பலருக்கும் தெரியாது. காரணம், தோபியாவும், சாராவும் காணப்படும் தோபித்து நூல் ஏழு இணைத் திருமுறை நூல்களுள் ஒன்று. இணைத் திருமுறை நூல்களை அறிந்தவர்கள் நம் நடுவில் அதிகமில்லை.

ஆனால், தோபித்து ஒரு குடும்பங்களின் நூல். தோபித்து, அவர் மனைவி அன்னா, இரகுவேல், அவர் மனைவி எதினா, தோபியா, அவர் மனைவி சாரா என குடும்ப உறவுகள் எவ்வாறு அமைய வேண்டும், கடவுளுக்கு அஞ்சி வாழ்கிற குடும்பங்களைக் கடவுள் எப்படி வியத்தகு முறையில் வழிநடத்துகிறார் என்பதை விறுவிறுப்பான நிகழ்வுகளின் வழியாக எடுத்துரைக்கும் சுவையான நூல். அனைவரும் அதை வாசிக்க வேண்டும்.

இந்நூலில் வரும் இரகுவேலின் மகளும், பின்னர் தோபியாவைத் திருமணம் செய்து அவர் மனைவியாக மாறுபவருமான சாரா நல்லதொரு மகளாக, மனைவியாக நமக்கு எடுத்துக்காட்டப்படுகிறார். அதே வேளையில் கூர்ந்து ஆய்வு செய்யும்போது, இளம் சாரா கன்னி மரியாவோடு ஒப்பிடும் வகையில் பல விதங்களில் ஒத்திருப்பதைக் காண்கிறோம்.

**1. பழிச்சொல் பற்றிய கலக்கம்.** எக்பத்தானா நகரில் வாழ்ந்துவந்த இரகுவேலின் மகள் சாரா, ஏழு முறை திருமணம் செய்து, ஏழு முறையும் அசுமதேயு என்னும் அலகை கணவரைக் கொன்றுவிட்டதால், கைம்பெண்ணாக இருந்தவர். ஒருநாள் தன் தந்தையின் பணிப்பெண்களுள் ஒருத்தி தன்னைப் பழித்துரைத்ததைக் கேட்டு, மனம் கலங்கினார் (தோபி 3:7). அன்னை மரியாவும் கபிரியேல் தூதரின் செய்தியைக் கேட்டு, தாம் கன்னியாயிருக்கும்போதே குழந்தைக்குத் தாயாகவேண்டும் என்பதை உணர்ந்து **"கலங்கி"** வானதூதரிடம் கேள்வி எழுப்பினார் (லூக் 1:29, 34)

**2. அதிதூதர்களின் உதவி.** சாரா, மரியா இருவரும் பேறுபெற்ற பெண்கள், காரணம் விண்ணகத் தூதரணிகளின் தலைவர்களான அதிதூதர்கள் இருவரையும் தேடிவந்து உதவி செய்தனர். கபிரியேல் தூதர் மரியாவைச் சந்தித்து, வாழ்த்தினார். அவர் கலக்கத்தைப் போக்கினார். அதுபோலவே, அதிதூதரான இரபேல் சாராவின்

மன்றாட்டை எடுத்துச் சென்று ஆண்டவரின் மாட்சிமிகு திருமுன் ஒப்படைத்தார் (தோபி 12:12).

**3. சிந்திக்கும் பெண்கள்.** சாரா, மரியா இருவருமே அறிவாற்றல் நிறைந்த, சிந்திக்கும் பெண்களாகக் காட்டப் படுகின்றனர். தனது துயர்நிலையின் காரணமாகத் தற்கொலை செய்ய நினைத்த சாரா, "மீண்டும் **சிந்தித்து**, 'என் தந்தையை மக்கள் பழிக்கலாம். 'உனக்கு ஒரே அன்பு மகள் இருந்தாள். அவளும் தன் துயர் பொறுக்க இயலாமல் நான்றுகொண்டாள்' என்று இகழலாம். இவ்வாறு, என் தந்தை இறக்க காரணம் ஆவேன்" (தோபி 3:10) என்று தனக்குள் சொல்லிக்கொள்கிறார். மரியாவும் அவர் வாழ்வில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் "தம் உள்ளத்தில் இருத்திச் **சிந்தித்துக் கொண்டிருந்தார்**" (லூக் 2:19).

**4. மனமாற்றம்.** தற்கொலை செய்ய வேண்டுமென்று மாடியறைக்குச் சென்ற சாரா, தன் அறிவாற்றலால் சிந்தித்து, அதன்பின் கடவுளை நோக்கி மன்றாடுகிறாள். "இவ்வுலகிலிருந்து நான் மறைந்துவிடக் கட்டளையிடும். ஆண்டவரே, நான் சாவது உமக்கு விருப்பமில்லையெனில், எனக்கு எதிராகச் சொல்லப்படும் பழிச் சொல்லையாவது அகற்றிவிடும்" (தோபி 3:13, 15) என்பதே அவரது மன்றாட்டின் சுருக்கம். அதன்பின் தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டு, மனமாற்றத்தோடு சாரா மாடியிலிருந்து கீழே இறங்கினாள். மரியாவும் வானதூதரின் வாழ்த்தைக் கேட்டுக் கலங்கி, குழப்பமடைந்தார். இருப்பினும், வானதூதரின் விளக்கத்தைக் கேட்டு மனமாற்றம் அடைந்து, "ஆண்டவரின் அடிமை" என்ற தம்மை ஒப்புக்கொடுத்தார்.

**5. இறைபுகழ்ச்சி.** சாரா, மரியா இருவருமே இறைபுகழ்ச்சி செலுத்துவது ஒரு வியப்பான ஒற்றுமையாகும். "இரக்கமுள்ள இறைவா போற்றி, என்றும் உம் திருப்பெயர் போற்றி. உம் செயல்களெல்லாம் உம்மை என்றும் போற்றுக" (தோபி 3:11) என்பது சாராவின் இறைப்புகழ்ச்சி. "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது" (லூக் 1:47) என்பது மரியாவின் இறைப் புகழ்ச்சி.

**6. மாசற்றவள், கன்னி.** சாரா தனது மன்றாட்டில், "ஆண்டவரே, நான் மாசற்றவள் என்பதும், எந்த ஆணுடனும் உறவு கொண்டதில்லை என்பதும் உமக்குத் தெரியும்" (தோபி 3:14) என்று அறிக்கையிடுகிறார். அன்னை மரியாவுக்கும் இந்த வரிகள் பொருந்தும் என்பதை நாம் அறிவோம்.

இவை தவிர, இன்னும் பல விதங்களில் சாரா, மரியாவின் முன்னோடியாக இருப்பதை நாம் எளிதில் கண்டுணரலாம். சாரா இறைத் திருவுளத்திற்குப் பணிந்தார். எனவே, கடவுளால் உயர்த்தப்பட்டார். பிறரால் பாராட்டப்பட்டார். அவருடைய மன்றாட்டு "கடவுளின் மாட்சியுடைய திருமுன் கேட்கப்பட்டது" (தோபி 3:16). வானதூதர் தோபியாவிடம் "சாராவை மணந்துகொள்ளும். இன்று இரவே அவள் உம்முடைய மனைவி ஆவாள் என்பது உறுதி" (தோபி 6:16) என்று சொல்வது, வானதூதர் யோசேப்பிடம் கனவில் சொன்னதற்கு ஒத்திருக்கிறது.

மொத்தத்தில், சாராவின் ஆளுமை அன்னை மரியாவின் ஆளுமைக்கு ஒரு முன்னோடி என்பதில் ஐயமில்லை.



அருள்பணி. குமார்ராஜா

# 'பனிமயம்' 2022-2023 – மீள் பார்வை

42

**மலரும் நினைவுகள்**

தூத்துக்குடி, திருஇருதயங்களின் பேராலயப் பங்குப் பணித்தளத்தில் ஏறத்தாழ பதினேழு ஆண்டுகள் திறம்படத் தொடர்ந்து பணியாற்றிய பழுத்த அனுபவ முதிர்ச்சியோடு, பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கு நிர்வாகப் பொறுப்பை **அருள்தந்தை சிலுவை முத்து தல்மெய்தா** (SMD) அடிகளார், 1954ஆம் ஆண்டு சூன் மாதம் நான்காம் நாள், ஏற்றெடுத்தார்கள்.

பங்குத் தந்தை என்ற பொறுப்பின் நிலைப்பாட்டை, தனது நீண்ட கால நிர்வாகத்தில், பாதிக்காத விதத்தில் பண்போடும் பாசத்தோடும் மக்களை அன்பொழுக அனுசரித்துப் போன பான்மையினால், பெரிய கோயில்/சின்னக் கோயில் என மக்களிடையே புரையோடிக் கிடந்த பழைய பிளவுகளும் வேற்றுமைகளும் மெல்ல மெல்ல நீர்த்துப் போகச் செய்தார்கள் – **செல்வராஜ் மிராந்தா.**

**இடைவிடா சகாய அன்னை**



இடைவிடா சகாய அன்னையின் படம் ஒரு வியப்பான ஓவியம். இது நற்செய்தியாளர் லூக்காவால் வரையப் பட்டது என்று ஒரு மரபு தெரிவிக்கிறது. இந்தப் படத்தின் முன்பாக நின்று இறைவேண்டல் செய்த பலரும் மிகுந்த ஆசிகளைப் பெற்றுக் கொண்டதால், இந்த ஓவியம் புதுமைப் படம் (MIRACULOUS PICTURE) என்றும் அழைக்கப்படுகிறது.

சகாய அன்னையின் படத்திலுள்ள பல அடையாளங்கள் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன. இப்படத்தில் அன்னை மரியா கருஞ்சிவப்பு ஆடையை அணிந்திருக்கிறார்கள். பைசாந்தியப் பின்னணியில் கருஞ்சிவப்பு என்பது அரசிக்குரிய நிறமாகும். அன்னை மரியா தமது கையால் திருமகன் இயேசுவை மக்களிடம் சுட்டிக் காட்டுவதுபோல் ஓவியம் அமைந்துள்ளது.

இந்த ஓவியத்தின் தனித்தன்மை அன்னையின் கரங்களிலுள்ள சிறுவன் இயேசுதான். சிறுவன் இயேசு அச்சமடைவது போலும், அதன் காரணமாக அவரது காலின் ஒரு செருப்பு கழன்று விழுவதுபோலும் ஓவியர் வரைந்து நம்மை வியப்படைய வைக்கிறார்.

மரியா மக்களை நோக்கி, "என் மகனைப் பாருங்கள்" என்று சொல்வதுபோல் இத்திருப்படம் அமைந்துள்ளது. – **அருள்பணி. மரிவேந்தன்.**

**சுடர்விடும் விண்மீன்கள்**

புனிதராக ஒருவர் அறிவிக்கப்படுவதற்கு என ஒரு செயல்முறையைத் தோற்றுவித்திருக்கிறது நம் தாய்த் திருஅவை. வாழும்போதே யாரையும் புனிதர் என அறிவிப்பதில்லை.

புனிதர் பட்டம் வழங்கும் குழு (COMMISSION FOR THE CAUSE OF SAINTHOOD) என்று கர்தினால் ஒருவரின் தலைமையில் இருக்கிறது. இறந்து, குறைந்தது ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, போதிய ஆதாரங்கள் இருப்பின், முதற்கட்டமாக ஒருவர் '**இறையடியார்**' (SERVANT OF GOD) என அறிவிக்கப்படுகிறார்.

அதன்பின் பரிந்துரையால் புதுமைகள் நிகழ்ந்திருக்கின்றன, அவரது வாழ்வு உண்மையிலேயே இறைவனுக்குச் சாட்சியாக அமைந்திருக்கிறது என்பது உறுதியானால், அவர் '**அருளாளர்**' (BLESSED) நிலைக்கு உயர்த்தப்படுகிறார்.

அதன்பின் இன்னும் ஆய்வுகள் நடத்தி உறுதிப்படுத்திய பிறகே, இறுதியாகப் '**புனிதர்**', **தூயவர்** (SAINT) என அறிவிக்கப்படுகிறார்.

அதன் பின்னரே, அவரது பெயரால் கோவில்கள், வழிபாடுகள் நிறுவப்படலாம். - **கிறிஸ் மிலியன்**

**வாழும் ஆசை யாரை விட்டது.**

நோய்வாய்ப்பட்டுக் கிடந்தவரிடம் மருத்துவர் கூறினார் - "உங்களிடம் உண்மையைச் சொல்லி விட வேண்டும் என்று நினைக்கிறேன்...... உங்கள் முடிவு காலம் நெருங்கிவிட்டது. யாரையாவது நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா?"

"ஆம்!" - என்று பதில் வந்தது.

"யாரைப் பார்க்க விரும்புகிறீர்கள்?"

"வேறொரு நல்ல மருத்துவரைத்தான்!"

இறப்பு என்பது தவிர்க்க முடியாததுதான். எனினும், இன்னும் கொஞ்ச காலம் வாழ வேண்டும் என்ற உந்துதல் எல்லா மனிதர்களுக்கும் இருக்கிறது! - **கலாபன் வாஸ்.**

**புனித ஜான் ஹென்றி நியூமன்**

ஆங்கிலிக்கன் திருஅவையில் பிறந்து, அன்னையைப் பற்றிக் கொண்டவர்.

நியூமனின் மரியன்னை பக்தியில் செபமாலைக்கு முக்கிய இடமிருந்தது. "**நிறைவின் குறுக்கு வழி**" என்னும் நூலில், நிறைவடைவதற்கான வழிகளாகப் பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கிறார்.

"அதிகாலையிலேயே படுக்கையைவிட்டு எழவேண்டும். நற்கருணை ஆண்டவரைச் சந்திக்க வேண்டும். மூவேளை வேண்டலை மன்றாட வேண்டும். கடவுளின் மாட்சிக்காக உணவு உண்ண வேண்டும். செபமாலையை நன்கு செபிக்க வேண்டும். தீய எண்ணங்களைப் புறக்கணிக்க வேண்டும். அன்றாடம் ஆன்ம சோதனை செய்ய வேண்டும். நேரத்தோடு படுக்கைக்குச் செல்ல வேண்டும். அப்போது நீங்கள் நிறைவாழ்வு வாழ்ந்தவராவீர்."

எப்படி? நாமும் இதனை எளிதாகப் பின்பற்றலாமே? - **அருள்பணி. குமார்ராஜா**

**மலரும் நினைவுகள்**

அருள்தந்தை இரத்தினராஜ் அவர்கள் 2000ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை, பரிசுத்த பனிமய மாதா பங்குக் குருவாகப் பணியாற்றினார்கள். 2000ஆம் ஆண்டில் பனிமயத் தாயின் தங்கத் தேர் விழா, சிறப்புடன் கொண்டாடப்பட்டபோது, ஆஸ்திரேலியா, பெர்த் மறைமாவட்ட ஆயரும் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

கோயில் மண்டபத்துக்கு முன்பிருக்கும் திறந்த வெளி நிரம்ப, கூட்டமாக ஆட்கள் தரையில் அமர்ந்திருப்பதைக் கண்டு, ஏதாவது செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார்.

பங்கில் போதுமான அளவு பணமிருந்ததால், திட்டத்தைச் செயல்படுத்த தகுந்த ஆட்களையும் பொறியாளர்களையும் தேர்வு செய்து, பணியை ஒப்படைத்தார். மேற்கூரை காங்க்ரீட்டினால் கவிழ்ந்த பாணியில் சவுக்கமான காங்க்ரீட் சட்டங்களின் தாக்கத்தில் நிற்கும்படி நேர்த்தியாகக் கட்டி முடிக்கப்பட்டது. அந்த புதிய கட்டுமானம், கோயில் பிரதான வாசலுக்கு முன்பு உள்ள மண்டபத்தின் நீளத்தையும் அளவையும் அழகுறக் கூட்டியதால், இப்போது ஆலயத்தின் தோற்றப்பொலிவு கூடியிருப்பதோடு, மக்கள் சௌகரியமாக அமர்ந்து, திருவழிபாடுகளில் கலந்துகொள்ள ஏதுவாகிறது. அதோடு மட்டுமல்லாமல், ஆலயப் பொருட்களின் பாதுகாப்பையும் அதிகரித்திருக்கிறது.

அவர் காலத்தில்தான், பங்குப் பேரவையின் செயல்பாடு நல்ல முறையில் நடைபெற்றது. சில உபகாரிகளின் உதவியால், புதிதாகக் கட்டப்பட்ட மண்டபப் பகுதியின்மேல், நவவிலாச சம்மனசுக்களின் சுரூபங்கள் நிறுவப்பட்டன.

தஸ்நேவிஸ் மாதா பெண்கள் பள்ளிக்கூடத்தின் அருகில் அந்தோனியார் சிற்றாலயம் சிறிதாகக் கட்டி முடிக்கப்பட்டது. அவருக்குப் பின் வந்த குருக்கள், அதன் நீளத்தைக் கூட்டி அழகுபடுத்தினர்.

2004ஆம் ஆண்டு மாறுதலாகிப் போகும்வரை, பங்கு நிர்வாகத்தில் யாதொரு பிரச்சனைகளும் எழாமல், சுமூகமாக ஓடியது. திருவழிபாடுகளும் செவ்வனே நடைபெற்று வந்தன.

**இறையடியார் அந்தோனி சூசைநாதரி**ன் தம்பி மகனான அருள்தந்தை ஜோசப் இரத்தினராஜ், தூத்துக்குடியைப் பூர்வீகமாகக் கொண்டவர். - **செல்வராஜ் மிராந்தா.**



**கலாபன் வாஸ்**

# பனிமயம்
## வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம் (3)

எதிர்வரும் 10.03.2024 ஞாயிறு மாலை சரியாக 04.00 மணிக்கு பனிமய அன்னைப் பேராலய வளாகத்திலுள்ள **அந்தோனியார் அரங்கத்தில்**

**பனிமயம் விவிலியப் போட்டியாளர்கள்** மற்றும் **விவிலியப் பாசறைப் பங்கேற்பாளர்களுக்கான ஒன்றுகூடல்**

2023 ஏப்ரல் முதல் 2024 மார்ச் முடியவுள்ள 12 மாதங்களிலும் பனிமயம் விவிலியப் போட்டியில் சரியான விடை எழுதிய பின்வருவோருக்கு இந்த விழாவில் நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**அந்தோனியார் அன்பியம்**
1. பிருந்தா சார்லஸ்
2. லூக்காஸ் சகாயம்
3. சரோஜா

**அன்னை தெரசா**
4. சுரேஷ் பிரேமா
5. சுகன் மோனிஷா

**அன்னை வேளாங்கன்னி**
6. நான்சி
7. டென்சி

**கிறிஸ்தரசர்**
8. ரெக்ஸ் கிரீன்வெல்
9. லூரட் வசந்த்
10. செலஸ்கி கிளமென்ட

**திவ்ய பாலன் அன்பியம்**
11. பிரின்சி
12. சகாயராஜ் தனராஜ்

**பாத்திமா மாதா**
13. ஜெசிந்தா கான்ஸ்டன்
14. ராஜா ரீனா

**இரக்கத்தின் மாதா**
15. பாப்டிஸ்டா
16. பிரைட்டன் ஜெரோஃபின்
17. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**
18. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
19. அந்தோனிசாமி
20. ட்ரைபேனா
21. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
22. வெனிட்டாள்
23. எலிஜா இம்மானுவேல்
24. சார்லட் பிராங்க்
25. ரஸ்கின் வசந்தா
26. ஜோ ட்ரினிஷா

**குழந்தை தெரசா**
27. கிறிஸ்டி லிஸ்டன்
28. பெனி மொறாயிஸ்
29. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
30. மோனிகா செபாஸ்டின்
31. அந்தோனியப்பா பிச்சம்மாள்
32. எமல்டா
33. ஆரோக்கியராஜ் ஹெலினா

**லூர்து மாதா**
34. ஜெனோ சேவியர்
35. ரோஸ்லின் தாமஸ்
36. சாண்டினா
37. ஆலிவர் விராயன்
38. சகாயராணி
39. ரஜூலா ஜான்போஸ்கோ

**பனிமய அன்பியம்**
40. மெர்சி கோமஸ்
41. ஜூடு ரதி

**பவுலடியார்**
42. ராஜா ரோஸ்லின்
43. லீமா ரோஸ்

**பொம்பெயி மாதா**
44. மாத்யூ கர்டோசா
45. டிஃபானி அண்டோ
46. லூடா கான்ஸ்டன்
47. ஜான்சிராணி அமல்ராஜ்

**சவேரியார்**
48. டெலிலா அமலன்
49. ரூபா மனுவேல்
50. அனுஷ்யா பீட்டர்

**செபஸ்தியார்**
51. அந்தோனியம்மாள் டென்சிங்
52. ஜெசிலா சேவியர்
53. அஸ்கேனியஸ்

**சிந்தாத்திரை மாதா**
54. நேசம்
55. ஜூடி ஆரோக்கியராஜ்
56. ராஜி ஜஸ்டின்

**சிறுமலர் அன்பியம்**
57. விஜி சகாயராஜ்
58. செலஸ்டின்

**சூசையப்பர்**
59. கிறிஸ் ரிஜோ
60. ரூபி கொர்னேலியுஸ்

**திருச்சிலுவை**
61. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
62. லூர்து லினட்

**ஆறுமுகனேரி**
63. தொம்மை அந்தோனி

**சென்னை**
64. கமலஜோதி ஜெயசீலன்
65. ஒஃபிலியா தாமஸ்

**பாளையங்கோட்டை**
66. பிரேமா குணசீலன்

**பேட்டை**
67. ஹெலனிட்டா

**கயத்தாறு**
68. அமல்ராஜ்

**பெரியகுளம்**
69. குழந்தை தெரஸ்

**வடக்குத்து**
70. ஹென்றிதாஸ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**குருஸ்புரம்**
71. ஆசீர்வாதம்
72. பௌவுசி ஜோ மைக்கேல்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
73. சுகிர்தா
74. சகாயம்

**யூதா ததேயு கோவில்**
75. ரோஸ் சேவியர்
76. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்தி நகர்**
77. ரியாலினோ
78. அன்சிட்டா

**சார்லஸ் கோவில்**
79. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
80. செக்கரியா சாமுவேல்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
81. விர்ஜின்
82. தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
83. சோஃபியா விஜய்
84. இருதயம்மாள் கபிரியேல்

**திரேஸ்புரம்**
85. கோல்வின் ஜேசுராஜ்

**அருள்பணி. குமார்ராஜா**
மேலாளர், இதழாசிரியர்

பனிமய பங்குத் தந்தையர் 3

# அருள்பணியாளர் வில்லியம் சந்தானம்



கடந்த 25 ஆண்டுகளில் பனிமயம் இதழை வளர்த்தெடுத்த பெருமைமிகு பங்குத் தந்தையரின் வரிசையில் மூன்றாவதாக உயர்ந்து நிற்பவர் அருள்பணியாளர் வில்லியம் சந்தானம் அவர்கள். அன்னார் 2009ஆம் ஆண்டில் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்கள். திருத்தலத்தின் அனைத்துப் பணிகளோடும், பனிமயம் இதழை வளர்க்கும் கடமையையும் தன்மீது ஏற்றுக்கொண்டார்கள். முதல் ஆண்டு முழுவதும் உதவிப் பங்குத் தந்தையான அருள்பணி. ஆரோக்கியராஜ் அவர்களே முதல் பக்கமாகிய “ஆசிரியர் பக்கத்தை” எழுதியிருக்கிறார்கள். 2010 ஜூன் மாதத்திலிருந்துதான் ஆசிரியர் உரையை எழுதியுள்ளார்கள். அவர்களின் மறையுரைபோலவே அன்னாரின் எழுத்தும் “நறுக்”கென்று உள்ளத்தைத் தொடும் வண்ணம் அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 2010 டிசம்பர் இதழில் “எளிமையே இனிமை” என்னும் தலைப்பில் “இதயத்தில் இயல்பாகவும் நேர்மையாகவும் இருப்பதே எளிமை” என்று எழுதியிருப்பது நம் கவனத்தை ஈர்க்கிறது.

2013ஆம் ஆண்டு 15ஆம் முறையாகப் பனிமயத் தாயின் தங்கத் தேர்ப் பவனி தந்தையின் காலத்தில் நடைபெற்றது ஒரு சிறப்பாகும். இதற்காக “சுத்தம் செய்வோம்” என்னும் தலைப்பில் பனிமயம் வழியாக ஆன்மீகத் தூய்மைக்காக அறைகூவல் விடுத்தார்கள்.

இவர்களின் காலத்தில் திரு. அன்றோ ரூபன் இதழின் ஆசிரியராக செயல்பட்டு, மாதந்தோறும் தலையங்கம் எழுதியுள்ளார். அருள்சகோதரிகள் பவுலின், ஜெசி, புஷ்பா, அமலா என துறவியர் பலரின் படைப்புகள் அன்னாரின் காலத்தில் இடம்பெற்றுள்ளன. “விசுவாச ஆண்டு சிந்தனைகள்” என்னும் பெயரில் திரு. கலாபன் வாஸ் தொடர் ஒன்றை எழுதியுள்ளார்கள். மணவைப் பிரியன், ஜாக்சன். ஜெரினா திபூர்சியுஸ் போன்றோர் தொடர்ந்து எழுதியுள்ளனர். “பேராலய போஸ்ட்” என்னும் பகுதியில் திருத்தலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2014 மே இதழில் தனது பிரியாவிடைப் பக்கத்தில் “அம்மா, நீங்க என்னைப் பார்த்துக்கொள்வதற்காக, காத்துக்கொள்வதற்காக நன்றி” என்ற நெகிழ்ச்சியான வாசகத்துடன் தன் இதழியல் பணியை நிறைவு செய்துள்ளார்கள். இத்தனை பணிகளைச் செய்து, இதழை வளர்த்த தந்தை வில்லியம் சந்தானம் அவர்களை பனிமயத்தின் வெள்ளி விழா ஆண்டில் நன்றியோடு நினைவுகூர்கிறோம். தற்பொழுது அமலி நகரில் அமலி அன்னையின் திருத்தலத்தில் பங்குத் தந்தையாக இறைபணியாற்றும் தந்தை அவர்களுக்குப் பனிமய அன்னையின் ஆசிகளை வழங்குகிறோம்.

அருள்பணி. குமார்ராஜா

# விவிலியப் போட்டி 109

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## லூக்கா 22-23

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**யார் யாரிடம் கூறியது?**

1. யார், யாரிடம் இயேசுவின் உடலைக் கேட்டார்?
2. எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம் - யார் யாரிடம் கூறியது?
3. நாம் பாஸ்கா விருந்துண்ண நீங்கள் போய் ஏற்பாடு செய்யுங்கள் - யார் யாரிடம் கூறியது?
4. நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து - யார் யாரிடம் கூறியது?
5. நீங்கள் சுமத்துகின்ற எந்த குற்றத்தையும் இவனிடத்தில் காணவில்லை - யார் யாரிடம் கூறியது?
6. இவன் நம் மக்கள் சீரழியக் காரணமாக இருக்கிறான்? - யார் யாரிடம் கூறியது?
7. இவனும் அவனோடு இருந்தவன் - யார் யாரிடம் கூறியது?
8. சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள். - யார் யாரிடம் கூறியது?

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.03.2024**

# விவிலியப் போட்டி 108

**பிப்ரவரி 2024** விடைக்குறிப்புகள்

***திருப்பாடல் 67 - 70***

| | | |
|---|---|---|
| 1. | ஆசி | திபா 67:6 |
| 2. | வாய் | திபா 66:17 |
| 3. | ஒளியை | திபா 67:1 |
| 4. | உறைவிடம் | திபா 68:6 |
| 5. | விரைந்து | திபா 70:1 |
| 6. | அருளும் | திபா 69:29 |
| 7. | ஊக்கமடைவதாக | திபா 69:32 |
| 8. | தாங்கிக் | திபா 68:19 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :



**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 200**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**

**சரியான விடை எழுதியவர்கள் : 128**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. செபமாலை மாதா அன்பியம் — சகாயம்மாள் பெனடிக்ட்
2. ஜூடு அன்பியம் — ஸ்வீன்சி ஃப்ராங்கோ
3. காவல்தூதர் அன்பியம் — ரஸ்கின் வசந்தா
4. குழந்தை தெரசா அன்பியம் — நிர்மல்

**பாராட்டுக்குரியவர்கள் : 124**

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. பிருந்தா சார்லஸ்
7. லூக்காஸ் சகாயம்
8. சரோஜா
9. ஜெயா
10. டோனி ரீகன்

**அன்னை தெரசா**
11. சுரேஷ் பிரேமா
12. ரெயிசா சுஜய்
13. சுகன் மோனிஷா
14. ரொவீனா
15. ஜூலியட் ரூபி
16. அந்தோனி சந்தியா

**அன்னை வேளாங்கன்னி**
17. நான்சி
18. டென்சி
19. ஜொசிட்டா
20. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**
21. ரெக்ஸ் கிரீன்வெல்
22. ஜெகன் பெமினா
23. லூரட் வசந்த்
24. ஜூலியட் சாவியோ
25. செலஸ்கி கிளமென்ட்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
26. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
27. பிரின்சி
28. சகாயராணி தன்ராஜ்

**பாத்திமா மாதா**
29. ஜெசிந்தா கான்ஸ்டன்
30. ராஜா ரீனா
31. ஆல்வின் அனு
32. ஜெனிட்டா மைக்கேல்

**இரக்கத்தின் மாதா**
33. பாப்டிஸ்டா
34. பிரைட்டன் ஜெரோஃபின்
35. இருதயம்மாள் கொன்சால்
36. சித்ரா மோத்தா
37. சேவியரம்மாள் கோமஸ்

**ஜெபமாலை மாதா**
38. கல்;யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
39. அந்தோனிசாமி
40. ட்ரைபேனா
41. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
42. வெனிட்டாள்
43. எலிஜா இம்மானுவேல்
44. சார்லட் பிராங்க்
45. ஜெயா அகஸ்டின்
46. ஜெசிமா கிளாரன்ஸ்
47. சாந்தி ஆல்ட்ரின்
48. ஜோ ட்ரினிஷா
49. ரஜூலா அலாய்
50. ஜூலியஸ் தல்மேதா
51. ராகேஷ்
52. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
53. கிறிஸ்டி லிஸ்டன்
54. பெனி மொறாயிஸ்
55. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
56. மோனிகா செபாஸ்டின்
57. அந்தோனியப்பா பிச்சம்மாள்
58. எமல்டா
59. பிரான்சிஸ் வாஸ்
60. ஆரோக்கியராஜ் ஹெலினா
61. பெனாட் கார்லூஸ்

**மணல் மாதா**
62. கெயிட்டன் ஃபர்னான்டோ
63. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
64. ஜெனோ சேவியர்
65. ரோஸ்லின் தாமஸ்
66. சாண்டினா
67. ஆலிவர் வி. ராயன்
68. சகாயராணி
69. ஃபிலோ கோமஸ்
70. ரஜூலா ஜான்போஸ்கோ
71. ரம்யா

**மிக்கேல் அதிதூதர்**
72. ஜோசபின் பர்னாந்து
73. ஷீபா
74. வினோ அந்தோனி

**பனிமய அன்பியம்**
75. மெர்சி கோமஸ்
76. ஜூடு ரதி
77. ஜாக்குலின் வினோதினி
78. சுரேஷ் ஆனி

**பவுலடியார்**
79. ராஜா ரோஸ்லின்
80. ஜான்சன் ஒஃபிலியா
81. லீமா ரோஸ்
82. ஹெலினா
83. காத்தரினா டிவோட்டா

**பரிபூரண மாதா**
84. சப்னா கின்ஸ்டன்

**பொம்பெயி மாதா**
85. மாத்யூ கர்டோசா
86. தெரசா பிரகாஷ்
87. அந்தோனியம்மாள் மச்சாது
88. டிஃபானி அண்டோ
89. லூடா கான்ஸ்டன்
90. ஜான்சிராணி அமல்ராஜ்
91. ஸ்நோ ஆல்ஃப்ரிக்
92. இம்மாக்குலேட்

**இராயப்பர்**
93. இந்திரா ரெஃப்லின்
94. நேவிசம்மாள்
95. டெய்சி

**சவேரியார்**
96. டெலிலா அமலன்
97. ரூபா மனுவேல்
98. அண்டன் சகாயம்
99. ஜென்சி ஜோர்னஸ்
100. அனுஷ்யா பீட்டர்
101. வினிஸ்டா ஹெரின்

**செபஸ்தியார்**
102. அந்தோனியம்மாள் டென்சிங்
103. ஜெசிலா சேவியர்
104. அஸ்கேனியஸ்
105. பிரவீணா
106. பிரின்சி லியோ

**சிந்தாத்திரை மாதா**
107. நேசம்
108. ஜூடி ஆரோக்கியராஜ்
109. ராஜி ஜஸ்டின்
110. இன்ஃபன்டா ஷரான்
111. சில்வியா அன்டோனட்

**சிறுமலர் அன்பியம்**
112. விஜி சகாயராஜ்
113. எல்சிட்டா ஆனந்த்
114. செலஸ்டின்
115. சோஃபியா ஜோசப்

**சூசையப்பர்**
116. கிறிஸ் ரிஜோ
117. ரூபி கொர்னேலியுஸ்
118. ஹேமலதா
119. மோனிஷா காஸ்பின்
120. ஜூலி
121. பிரவீணா
122. மேரி ஜிஃபானா ஃபர்னான்டோ
123. மரிய ஜெனட் ஃபர்னான்டோ

**திருச்சிலுவை**
124. சரோலின் கில்டன்
125. ரமணி டிவோட்டா
126. ஜஸ்டின் ஸ்நோ குளோரி

**வியாகுல மாதா**
127. கனிஸ்டா ப்ரோசஸ்
128. லூர்து லினட்

## பரிசு பெறுபவர்கள் : 4

129. பழைய காயல் — *மலர்*
130. சென்னை — *ஷைனி ரால்ஃப்*
131. திருஇதயங்களின் பேராலயம், தூடி — *டானியா வினோத்*
132. கோவை சூலூர் — *சத்யா சேவியர்*

## பாராட்டுக்குரியவர்கள் : 68

**ஆலந்தலை**
133. மரியம்மாள்
134. பொன்சேகா

**வீரபாண்டியன்பட்டணம்**
135. ரேச்சல் ராயன்

**சிப்பிகுளம்**
136. ஜெனசிஸ்

**ஆறுமுகனேரி**
137. தொம்மை அந்தோனி
138. ஜெயராணி

**ஏரல்**
139. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
140. ஹெலன் அன்னமணி

**சென்னை**
141. கமலஜோதி ஜெயசீலன்
142. ஒஃபிலியா தாமஸ்

**பாளையங்கோட்டை**
143. பிரேமா குணசீலன்
144. ரோசி
145. மிக்கேல் அம்மாள்
146. சுவர்ணா ஃபர்னான்டோ

**பேட்டை**
147. ஹெலனிட்டா

**கயத்தாறு**
148. அமல்ராஜ்

**பெரியகுளம்**
149. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
150. ரொசாலி

**கோயம்புத்தூர்**
151. ராஜேந்திரன் அருள்

**திருச்சி**
152. மோனிட்டா கிறிஸ்டி
153. மேத்யூ விவேக்
154. டோனி
155. ஜான்சி ராணி

**சேலம்**
156. செல்வ நாயகி

**மதுரை**
157. சகோ. ஜான்சி மேரி

**வடக்குத்து**
158. ஹென்றிதாஸ்

**பரமக்குடி**
159. சைமன் சாந்தி

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
160. பீட்டர் ஜெயந்தி
161. ரிமோல்டா
162. ரமோலா கமிலஸ்
163. ஜெயா ஃபெலிக்ஸ்
164. பிரசன்னா

**குருஸ்புரம்**
165. ஆசீர்வாதம்
166. பௌவுசி ஜோ மைக்கேல்
167. ஜான்சி மெண்டிஸ்
168. பிளசி செல்வராஜ்
169. டெல்பின்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
170. சுகிர்தா
171. ஷெரினா
172. சகாயம்

**யூதா ததேயு கோவில்**
173. ரோஸ் சேவியர்
174. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
175. யூஜினியா கேத்லியா
176. ரியாலினோ
177. அன்சிட்டா
178. அனிதா
179. பின்டன் சோஃபியா
180. ஷாந்தினி
181. ரமேஷ் நர்மதா
182. பேபி வால்ட்டர்

**சார்லஸ் கோவில்**
183. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
184. செக்கரியா சாமுவேல்
185. ஜோசி குணபாலன்
186. லிஜியா பர்னாந்து

**இஞ்ஞாசியார்புரம்**
187. பெத்தனி கான்வென்ட்
சகோ. லோரா மேரி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
188. விர்ஜின்
189. தயாபர ராணி
190. சலேட் ரியா
191. ரிஜோனா ஆரோ

**அந்தோனியார் கோவில்**
192. சோஃபியா விஜய்
193. இருதயம்மாள் கபிரியேல்
194. வயோலா ஜான்சன்
195. மென்சிலா லொயோலா
196. டயானா வினோத்

**திரேஸ்புரம்**
197. கோல்வின் ஜேசுராஜ்

**பாத்திமா நகர்**
198. மேரி ஹேம்லின்
199. ஜெனோஃபியா

**கோவளம்**
200. சரோஃபின் ஜோசப்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 204**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 200**

மாதம்
ஒரு
மாதா படம் :
46



டால்ட்ரின்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 56)

**மார்ச் - 2024**


| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி சைமன் ஆல்டஸ் | 74485 18127 |
| களப் பணியாளர் | : | சகோதரர் ஆல்ட்ரின் | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |


## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 07.10 - 07.30

சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 28.07.2024

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

524. நமது பேராலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட திருப்பலி 29.01.2024 திங்கள் காலையில் **மாதா தொலைக்காட்சியில்** ஒளிபரப்பு செய்யப்பட்டது.

525. லூர்து அன்னையின் விழா 01.02.2024 வியாழன் அன்று தொடங்கி, 11.02.2024 ஞாயிறு அன்று நிறைவுபெற்றது. 10.02.24 சனி மாலை ஆராதனைக்கு நற்செய்தி நடுவ இயக்குநர் அருள்பணி. **ஸ்டார்வின்** தலைமையேற்றார். மறுநாள் காலை 06.30 திருவிழாத் திருப்பலிக்கு இயேசு சபைத் துறவி அருள்பணி. **அகஸ்டின்** தலைமையேற்றார். மாலையில் சப்பரப் பவனியும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. விழாவின் 11 நாள்களும் திரளான மக்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

526. இந்த ஆண்டின் தவக்காலம் 14.02.2024 சாம்பல் புதன் அன்று தொடங்கியது. மூன்று திருப்பலிகளிலும் சாம்பல் பூசப்பட்டது. நண்பகல் 12.00 முதல் 03.00 வரை **தவக்காலத் தொடக்க நோன்பு வழிபாடு** நடைபெற்றது.

527. **"அரசுத் தேர்வு எழுதவிருக்கும் மாணவ, மாணவியருக்கான"** பனிமய நோன்பு வழிபாடு (41) 18.02.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் பெயர்களைக் கொடுத்திருந்த 600 இளையோருக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்குப் பனிமயத் தாயின் பாதத்தில் வைத்து ஆசிபொழியப்பட்ட பேனாக்கள் பரிசாக வழங்கப்பட்டன.

528. நமது ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகையின் ஐந்தாவது ஆயர் திருநிலைப்பாட்டு நாளை முன்னிட்டு 24.02.2024 சனி மாலையில் திருஇதயங்களின் பேராலயத்தில் நடைபெற்ற கூட்டுத் திருப்பலியில் நமது பங்குத் தந்தையரும், பங்கு மக்களும் கலந்துகொண்டு ஆயருக்காக மன்றாடினர்.

529. ஆண்டுதோறும் நடைபெறும் **தவக்காலத் திருப்பயணம்** 25.02.2024 ஞாயிறு அன்று நடைபெற்றது. பங்கு மக்கள் 54 பேர் தூத்துக்குடி, கோட்டாறு, பாளை மறைமாவட்டத் திருக்கோவில்களுக்குத் திருப்பயணம் சென்று வந்தனர்.

530. பனிமயம் இதழின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக பனிமயம் எழுத்தாளர் - வாசகர் ஒன்றுகூடல் 25.02.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. பனிமயம் இதழின் நெடுங்கால எழுத்தாளர்கள் திரு. கலாபன் வாஸ், திரு. சொர்ணராஜன் விக்டோரியா உள்பட 25 எழுத்தாளர்களுக்குப் பனிமய எழுத்தாளர் விருது வழங்கப்பட்டது.

# பங்கில் நிகழ்ந்தவை



## ஆசீ கூறுகின்றோம்

## 1. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 131. | கிராசிங்டன் - ருச்சிதா | செபஸ்தியார் | 07.02.2024 |



## செபிக்கின்றோம்

## 2. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 188. | அந்தோணியப்பா பர்னாந்து | பிச்சம்மாள் | 26.01.2024 | குழந்தை இயேசு |
| 189. | மார்னிங் ஸ்டார் | பென்சிகர் | 27.01.2024 | சிறுமலர் |
| 190. | வயோலா கோமஸ் | ஜே.டி.கோமஸ் | 02.02.2024 | குழந்தை தெரசா |
| 191. | டொம்னிக் | ரமணி | 02.02.2024 | தஸ்நேவிஸ் மாதா |
| 192. | மைக்கேல்ராஜ் வி.ராயன் | அந்தோணியம்மாள் | 05.02.2024 | திவ்ய பாலன் |
| 193. | ரேஜிஸ் பர்னாந்து | பபினுஸ் பர்னாண்டோ | 17.02.2024 | கிறிஸ்து அரசர் |
| 194. | சேவியர் பர்னாந்து | பாத்திமா பர்னாந்து | 18.02.2024 | அன்னை வேளாங்கன்னி |

# திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 163. | 05.03.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | தலையான பாவம் 4 : கோபம் |
| 164. | 12.03.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | தலையான பாவம் 5 : மோகம் |
| 165. | 19.03.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தலையான பாவம் 6: பெருந்தீனி ஆர்வம் |
| . | 26.03.2024 | செவ்வாய் | பெரிய வாரம் : விடுமுறை | |
| 166. | 02.04.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | உயிர்ப்பின் வாழ்வு |



# தவக்காலம் 2024 திருநிகழ்வுகள்



## செவ்வாய்தோறும் திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் தவக்கால நற்செய்தியும், திருப்பலியும்

| வாரம் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 5. | 05.03.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | தலையான பாவம் 4: கோபம் |
| 6. | 12.03.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | தலையான பாவம் 5: மோகம் |
| 7. | 19.03.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தலையான பாவம் 6: பெருந்தீனியார்வம் |

## வியாழன்தோறும் மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து குறுந்தியானங்கள்

- 07.03.2024 - இயேசுவின் உவமைகள் காட்டும் பாவங்கள்
- 14.03.2024 - பாவ அறிக்கையின் சிறப்புகள்
- 21.03.2024 - ஒப்புரவு அருள்சாதன ஆசீர்வாதங்கள்



## ஞாயிறு சிறப்பு நிகழ்வுகள்

- 03.03.2024 காலை 09.30 முதல் மாலை 04.00 வரை மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் ஒருநாள் தவக்காலத் தியானம். (அருள்பணி. ஜெமல்ஸ், பாளை மறைமாவட்டம்)
- 10.03.2024 மாலை 06.00 திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் தவக்கால நற்செய்திக் கூட்டம்.
- 17.03.2024 மாலையில் ஆயர் தலைமையில் தவப் பவனி நமது பேராலயத்தில் தொடங்கி, திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.

## சிறப்பு திருமணி ஆராதனை

19.03.2024 செவ்வாய் மாலை 06.30 முதல் மாலை 07.30 வரை நடைபெறும்



## புனித வாரத் திருநிகழ்வுகள்



- 24.03.2024 குருத்து ஞாயிறு. காலை 11.00 முதல் பிற்பகல் 03.00 வரை திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் நோன்புடன் கூடிய குறுந்தியானம் அருள்பணி. ஜெயக்குமார் அவர்களின் தலைமையில் நடைபெறும்.
- மார்ச் 28, 29, 30 (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி) புனித வாரத் திரு நிகழ்வுகள் அருள்பணி. ரூபஸ் காட்வின் சே.ச. அவர்களின் தலைமையில் நடைபெறும்.
- 01.04.2024 உயிர்ப்பு வாரத் திங்கள் மாலையில் அனைத்து இல்லங்களும் பாஸ்காத் தண்ணீரால் புனிதப்படுத்தப்படும்.



# புனித வாரத் திருநிகழ்வுகள் – 2024



## 24.03.2024 - திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

| | |
|---|---|
| காலை 05.00 | முதல் திருப்பலி |
| காலை 06.15 | தூய சவேரியார் மண்டபத்தில் குருத்தோலை மந்திரிப்பு, பவனி, பேராலயத்தில் திருப்பலி |
| காலை 08.15 | மூன்றாம் திருப்பலி |
| காலை 09.30 | நான்காம் திருப்பலி (ஆங்கிலம்) |
| காலை 11.00 முதல் 03.00 வரை | திருச்சிலுவை சிற்றாலயத்தில் நோன்புத் தியானம்: "சிலுவையிலிருந்து 7 வார்த்தைகள்" – அருள்பணி. ஜெயக்குமார், திருஇதயங்களின் பேராலயம் |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி |
| மாலை 06.30 | நற்கருணைஆசீர் |



## 25.03.2024 - புனித வாரத் திங்கள்

| | |
|---|---|
| காலை 05.30, 06.30 | காலைத் திருப்பலிகள் |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி – தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு |

## 26.03.2024 - புனித வார செவ்வாய் - திருஎண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி

| | |
|---|---|
| காலை 05.30, 06.30 | காலைத் திருப்பலிகள் |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி நடைபெறாது. திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் மேதகு ஆயர் தலைமையில் திரு எண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி நடைபெறும். |

## 27.03.2024 - புனித வார புதன்

| | |
|---|---|
| காலை 05.30, 06.30 | காலைத் திருப்பலிகள் |
| மாலை 05.30 | மாலைத் திருப்பலி – தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு |


## 28.03.2024 - புனித வியாழன் - ஆண்டவரின் இராவுணவு

| | |
|---|---|
| மாலை 06.00 | பேராலய வளாகத்தில் திருப்பலி, பாதம் கழுவும் சடங்கு. திருப்பலி முடிவில் நற்கருணை இடமாற்றுப் பவனி நடைபெறும். தொடர்ந்து பேராலயத்தில் நற்கருணை ஆராதனை நடைபெறும். |
| இரவு 08.00 - 08.30 | சவேரியார், பவுலடியார் மண்டல அன்பியங்கள் |
| இரவு 08.30 - 09.00 | அந்தோனியார், மணல் மாதா மண்டல அன்பியங்கள் |
| இரவு 09.00 - 09.30 | பாத்திமா மாதா, அன்னை தெரசா மண்டல அன்பியங்கள் |
| இரவு 09.30 - 10.00 | சூசையப்பர், இராயப்பர் மண்டல அன்பியங்கள் |
| இரவு 10.00 - 10.30 | செபஸ்தியார் மண்டல அன்பியங்கள் |
| இரவு 10.30 - 11.00 | கிறிஸ்து அரசர் மண்டல அன்பியங்கள் |
| இரவு 11.00 - 12.00 | பொது ஆராதனை |



**இரவு 12.00** நகர வீதிகளில் **பெரிய சிலுவைப் பாதை** பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் நடத்தப்படும். சிந்தனைகள்: அருள்முனைவர் **ரூபஸ் காட்வின்** சே.ச.

## 29.03.2024 - புனித வெள்ளி - ஆண்டவரின் திருப்பாடுகள்



**காலை 05.00 முதல் மாலை 03.00 வரை** அமைதியில் நற்கருணை ஆராதனை. தனியாகவும், குடும்பமாகவும் ஆராதனை செய்யலாம். இன்று **உண்ணா நோன்பு** (ஒருசந்தி), **புலால் நோன்பு** (சுத்தபோசனம்), **ஊடக நோன்பு** (தொலைக்காட்சி, இணையதளம், திறன்பேசி தவிர்ப்பு) கடைப்பிடிப்போம்.

**காலை 11.30** பேராலயத்தை சுற்றி சிலுவைப் பாதை.

**மாலை 6.00** திருப்பாடுகளின் வழிபாடு

திருச்சிலுவை ஆராதனையின்போது பசி, பிணி ஒழிப்புக்காக, அறப்பணிக்காக தாராளமாக காணிக்கை செலுத்துங்கள்.

வழிபாட்டின் முடிவில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஆசந்தி சுரூபம் முத்தி செய்வதற்காக வைக்கப்படும்.

## 30.03.2024 - புனித சனி

இன்றைய பகல் பொழுதை அமைதியில் கழிப்போம்.

## உயிர்ப்பு பெருவிழா (திருவிழிப்பு)

**இரவு 11.00 மணி** திருவிழிப்பு வழிபாடு: பாஸ்கா புகழுரை, இறைவார்த்தை, திருமுழுக்கு வழிபாடு, திருமுழுக்கு நீர் மந்திரித்தல்.

திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்க மெழுகுதிரி கொண்டு வாருங்கள்.

## 31.03.2024 - உயிர்ப்பு ஞாயிறு



**காலை 6.30 மணி** முதல் திருப்பலி

**காலை 8.00 மணி** இரண்டாம் திருப்பலி

**ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறாது.**

**மாலை 6.30 மணி** செபமாலை, உயிர்த்த இயேசுவின் திருவுருவப் பவனி, நற்கருணை ஆசீர்

**பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்ப்புப் பெருவிழா மூன்று நாள் வழிபாடுகளுக்கும் தலைமையேற்று வழிநடத்துபவர் அருள்முனைவர் ரூபஸ் காட்வின் சே.ச.,** புனித அருளானந்தர் கல்லூரி, கருமாத்தூர்.

**நமது பங்கின் பரிசுத்த அமலோற்பவமாதா வாலிபர் சபையினர் அச்சிட்டு, கடந்த 3 ஆண்டுகளில் நாம் பயன்படுத்திய "புனித வாரக் கையேடு" உங்கள் இல்லங்களில் இருந்தால், இந்த வாரம் முழுவதும் வழிபாடுகளுக்குக் கொண்டுவந்து பயன்படுத்துங்கள்.**

## 01.04.2024 - உயிர்ப்பு திங்கள்

**மாலை 5.30 மணி** அனைத்து இல்லங்களும் பாஸ்கா நீரால் புனிதப்படுத்தப்படும்.

# TENTH YEAR REMEMBRANCE

"Well done good and faithful servant. You have been faithful in little now I will make you masters over many Enter into the joy of your Lord" (Matt 25:21)



**Born**
**06.11.1940**

**Died**
**21.03.2014**

# VIMALA MIRANDA

**(W/o. Late. Rosary Miranda)**

*Life is but a stopping place....*
*A pause in what's to be,*
*A resting place along the road,*
*To sweet eternity.*
*We all have different journey,*
*Different paths along the way.*
*We all were meant to learn some things,*
*But never meant to stay...*
*Our destination is a place,*
*Far greater than we know...*

*Fondly Remembered By*

**FAMILY & FRIENDS**

**No.11/6, State Bank of India Staff 1st Colony,**
**Bye Pass Road, Madurai - 625 016.**

# 30TH YEAR DEATH REMEMBRANCE



**Born**
**02.08.1936**

**Died**
**25.11.1993**

# H. DENZIL ROCHE

*Those we love do not leave us;*
*they walk alongside us every day.*
*Unseen, unheard, but always near...*
*The heart that truly loves never forgets...*

*When a loved one fades into memory,*
*the memory itself becomes priceless...*
*A life that touches others goes on forever.*

*Love*

**WIFE - CHILDREN - GRANDCHILDREN**

# விண்ணக வாழ்வின்
# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**12.03.2024**

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா 11:25).

பிறப்பு
20.10.1950



இறப்பு
12.03.2021

# A. அருள்சீலி பர்னாந்து

வயது : 71

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மகன் : A. சேசையா பர்னாந்து
மருமகள் : J. ஜெயஸ்ரீ பர்னாந்து
மகன் : A. ஜாய்சன்
மருமகள் : J. பமிலா
பேத்தி : J. ரேச்சல்
பேரன்கள் : J. ஜெசாந் பர்னாந்து
J. ஜெர்விந் பர்னாந்து

மற்றும் குடும்பத்தினர்

SHINY Ph : 98421 31493